**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

CC.No. 9/2023 தேதி 15.04.2026

PW– 1 திரு. பாண்டியராஜன் , 36/2026 , த/பெ. ஜெகநாதன்

**(எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் குவிமுச பிரிவு 311 ன் கீழ் சாட்சியை திரும்ப அழைக்க மனுதாக்கல் செய்து அது Crmp 4007 /2025 தேதி 05.03.2026 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.)**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன் Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் B.Sc., படித்துள்ளேன். நான் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல சொல்ல போலிஸார் எழுதினார்கள். நான் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் 25.08.2019 சுமார் மாலை 05.00 மணி இருக்கும். மீண்டும் மறுநாள் 26.08.2019 சுமார் 08.00 மணியளவில் மருத்துவமனையில் இருந்தபோது போலிஸாரிடன் புகார் சொன்னேன், அவர்கள் எழுதிக்கொண்டார்கள். 24.08.2019 என்னை எதிரிகள் காவல் நிலையத்தில் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். 24.08.2019 அன்று எதிரிகள் என்னை கா.நி விட்டபோது என்னுடன் வேறு யாரும் வந்தார்களா என்றால் மாதவனும் என்னுடன் வந்தார். மாதவனையும் எதிரிகள் தான் கா.நி அழைத்து வந்தார்களா என்றால் ஆமாம். எங்களை டாடா Magic வண்டியில் கூட்டிசென்றார்கள். அந்த வாகனம் யாருடையது என்றால் எனக்கு தெரியாது. மாதவன் தம்பிக்கோட்டையை சேர்ந்தவராவார். என் ஊரான துவரங்குறிச்சியிலிருந்து எதிரிகள் ஊரான மஞ்சவயல்

செல்லும் தார்சாலை எதிரிகள் வயலுடன் முடிந்துவிடுகிறது என்றால் சரிதான். எதிரிகள் தோப்பிலிருந்து என் அக்கா செல்வியின் மீன்குட்டைக்கு செல்வதற்கு வரப்பில்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். எதிரிகள் தோப்பிற்கு அருகில் வீடுகள் இல்லை என்றால் சரிதான். என் அக்காவின் கணவர் குணசேகர் என்றால் சரிதான். சாட்சிகள் ரமேஷ், சுரேஷ், ராஜேந்திரன், சிவாஜி, ராஜகோபால் அவர்கள் வீடு என் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1/2 கி.மீ இருக்கும். எதிரிகள் என்னை அடித்தது யாருக்கு தெரியும் என்றால் சிவாஜி, ராஜேந்திரன், செல்வி, சுரேஷ் S/o சௌந்தரராஜன், மாதவன் ஆகியோருக்கு தெரியும். நான் போலிஸாரிடம் கொடுத்த புகாரில் சம்பவம் மேற்படி நபர்களுக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலிஸார் 24.08.2019 என்னை விசாரித்தார்கள். அப்போது சம்பவம் மேற்படி நபர்களுக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, வலி அதிகமாக இருந்ததால் பேசவில்லை. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். யார் யார் எந்த இடத்தில் அடித்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிஸார் விசாரித்து வாக்குமூலம் பெற்றபோது அதிலும் யார் யார் எந்த இடத்தில் எந்த ஆயுதத்தில் அடித்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் குடிபோதையில் இருந்ததால் எனக்கு எதுவும் நினைவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் என்னை எதற்கு அடித்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, பின்பு எதிரிகளின் போர்செட்டை உடைத்ததாக சொன்னதை தெரிந்து கொண்டேன். சம்பவதன்று நான் எதிரிகள் தோப்பிற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் என் அக்கா வீட்டில் பைக்கை வைத்துவிட்டு நடந்து சென்றேன். சம்பவதிற்கு முதல்நாள் என் அக்கா வீட்டிற்கு என்

பைக்கில் சென்றுவிட்டு மறுநாள் சம்பவதன்று நான் என் அக்கா வீட்டிலிருந்து நடந்தும், என் நண்பர்கள் பைக்கிலும் சம்பவதன்று தோப்பிற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அந்த பைக் என்ன ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதை போல் என் அக்கா தோப்பில் மீன்குட்டை எதுவும் இல்லை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் நண்பர்களுடன் சேர்ந்து எதிரிகளின் தோப்பிலிருந்த போர்செட்டை உடைத்து அனைத்தையும் சேதப்படுத்தினோம் என்றாலும் அதனால் ஊர்காரர்கள் சேர்ந்து எங்களை அடித்தார்கள் என்றாலும் சரியல்ல. பிறகு அதை கேள்விபட்டு எதிரிகள் எங்களை வாகனத்தில் அழைத்துவந்து கா.நி ஒப்படைத்து சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் சரியல்ல. என்னை அடித்ததாக சொல்லும் ஆயுதங்களை காட்டி போலிஸார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நாங்கள் எதிரிகளின் போர்செட்டை உடைத்ததற்கு அவர்கள் எங்கள் மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அது பொய் புகார் ஆகும். சம்பவதன்று நாங்கள் குடிபோதையில் இருந்ததால் எங்களுக்கு என்ன நடந்தது என்று எதுவும் தெரியாது என்றாலும் எதிரிகள் ஊர்காரர்களிடமிருந்து எங்களை மீட்டு கா.நி சேர்த்தார்கள் என்றாலும் அதனால் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.